காத்திருந்து, நடுப்பகுதிக்குப் பிறகு , க்ரஹணம்முடியும் முன்பாக, பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும்.

அவ்வாறே க்ருஷ்ணபக்ஷத்தில்(அமாவாஸையில்) தொடங்கி சுக்லபக்ஷ ப்ரதமையில் முடியும் ஸூர்யக்ரஹணத்தில், க்ரஹணம் பிடி(ஆரம்பி)த்தவுடனேயே ஸ்னானம்செய்து, தர்ப்பணத்தை (க்ரஹணத்தின் நடுப்பகுதிக்குள்) செய்து விட வேண்டும்.

72.ஷண்ணவதி தர்ப்பணம் என்றால் என்ன? எப்போது செய்யணும்?

ஷண்ணவதி என்கிற ஸம்ஸ்கிருதச்சொல்லுக்குத் தொண்ணூற்றாறு (96) என்று பொருள்.

ஒவ்வொருவரும் அவரவர்களின் பித்ருக்(முன்னோர்)களின் த்ருப்திக்காக ஒருவருடத்தில் 96 நாட்கள் தர்ப்பணங்களைச் செய்யவேண்டும். இவைகளே ஷண்ணவதி தர்ப்பணங்கள் என்று கூறப்படுகின்றன.







अमा युग मनुक्रान्ति धृति पात महाळया: ।
अष्टकाऽन्वष्टका चेति षण्णवत्य: प्रकीर्तिता: ।।

*அமாயுக³ மனு க்ராந்தி த்⁴ருதி பாத மஹாளயா:*
*அஷ்டகா அன்வஷ்டகா சேதி ஷண்ணவத்ய: ப்ரகீர்திதா:*

என்கின்ற வசனப்படி ஒரு வருடத்தில் 96 நாட்கள்.

- அமாவாஸை நாட்கள் பன்னிரண்டு
- க்ருதயுகம் முதலிய யுகாதி நாட்கள் நான்கு
- ஸ்வாயம்புவம் முதலிய மன்வாதி நாட்கள் பதினான்கு
- (தமிழ்)மாதப்பிறப்பு புண்யகால நாட்கள் பன்னிரண்டு
- ஒவ்வொரு மாதமும் வரும் வைத்ருதி நாட்கள் பதிமூன்று
- ஒவ்வொரு மாதமும் வரும் வ்யதீபாதம் நாட்கள் பதிமூன்று
- மஹாளயபக்ஷம் நாட்கள் பதினாறு

(மார்கசீர்ஷம் முதல் நான்கு மாதங்களும்)

- அஷ்டகா நான்கு நாட்கள்
- அஷ்டகைக்கு மறுதினம் அன்வஷ்டகா நான்கு நாட்கள்
- பரேத்யு எனப்படும் திஸ்ரோஷ்டகா நாட்கள் நான்கு

என்பதாக ஆக மொத்தம் ஒரு வருடத்தில் 96 தினங்கள் பித்ரு தினம். இவைகள் எந்தெந்த நாட்களில் நிகழ்கின்றன என்பதை பஞ்சாங்கத்தைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். வைதிகஸ்ரீயிலும் இந்நாட்கள் ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படுகின்றன.

இந்த ஷண்ணவதி நாட்களில் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்ய வேண்டும். ஒவ்வொரு வருடமும் இவ்வாறு 96 நாட்களும் தர்ப்பணம் செய்ய முடியாவிட்டாலும் வாழ்நாளில் ஒரு வருஷமாவது இவ்வாறு 96 நாட்களும் பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்வது குடும்பத்தில் நிம்மதியைத்தரும்..







இந்த 96 நாட்களும் தர்ப்பணம்செய்ய இயலாதவர்கள் அமாவாஸ்யை 12 நாட்கள், மாதப்பிறப்பு 12 நாட்கள், மஹாளயம் 16 நாட்கள், ஆகிய நாட்களிலாவது தர்பணம் செய்யலாம்.

அதுவும் இயலாதவர்கள் 12 மாத அமாவாஸை,மற்றும் மாதப் பிறப்பு நாட்களிலாவது தர்ப்பணம் செய்யலாம்.

73. ஷண்ணவதி தர்பணம் செய்வதை எப்போது முதல் ஆரம்பிக்கலாம்? என்ன பலன்?

வருஷத்தில் 96 நாட்கள்செய்யப்படும் ஷண்ணவதி தர்ப்பணத்தால் நமதுமுன்னோர்களுக்கு (பித்ருக்களுக்கு) திருப்தி ஏற்படுகிறது. நல்ல குழந்தை(புத்ரன்)பிறந்து வம்சவ்ருத்தி உண்டாகும். பித்ருதோஷம் போய்விடும். பித்ருக்கள் சந்தோஷமடைந்து நமக்கு நீண்டஆயுள், ஆரோக்கியம், குடும்பத்தில் நிம்மதி,மனஸ்சாந்தி முதலியவைகளைத் தந்து அனுக்ரஹிக்கிறார்கள்.

ஜன்மாவில் ஒருவருஷமாவது இந்த 96 தர்பணங்களையும் செய்யவேண்டும். தமிழ் வருஷப்பிறப்பன்றோ, அல்லது தாய் தந்தைக்குச் செய்யப்படும் வருஷாந்த்ர ச்ராத்தம் முடிந்த உடனேயோ, ஆரம்பித்துச்செய்யலாம். அதற்காகவே வைதிகஸ்ரீயில் ஷண்ணவதி தர்பண ஸங்கல்பங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

74. விவாஹம் அல்லது உபநயனம் ஆனவுடன் வரும் அமாவாஸை முதலிய நாட்களில் பித்ரு தர்பணம் செய்யலாமா?

பித்ருக்களுக்குச்செய்யும் தர்பணத்தை எக்காலத்திலும் முக்கிய காரணமில்லாமல் ,செய்யாமல் விடக்கூடாது.

விவாஹம் உபநயனம் போன்ற மங்களகாரியங்கள் நடந்த பிறகு தினஸரிசெய்யும் தர்பணத்தை ஒரு சில்காலம் கருப்பு எள்ளை சேர்த்துக்கொண்டு செய்யக்கூடாது என்றும், எள்ளுக்கு பதிலாக அக்ஷதையும், தர்பைக்கு பதிலாக அருகம்புல்லும், சேர்த்துக்கொண்டு தர்ப்பணம் செய்யவேண்டும் என்றும் போதாயன மஹர்ஷியின் வசனம்.